24th October 1964]

செய்வதைப்பற்றி சீப் என்ஜினியர் பரிசீலித்துக் கொண்டிருக்கிறார்கள். எஸ்டிமேட்டுகள் அங்கீகரிக்கப்பட்ட பிறகு, வேலை துவக்கப்படும். குறிப்பிட்ட எந்த டாங்கையாவது பற்றிக் கேள்வி கேட்டால், உண்டா, இல்லையா என்று பதில் சொல்லலாம். அதோடு மட்டுமல்லாமல் கிளியனூர் சித்தேரி டாங்கை ரூ. 53,500 செலவில் ரிப்பேர் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : இப்படி ஏரி எதிர்வாய்க்காலிலுள்ள நிலங்களை நீர் பிடிப்பினால் நஷ்டம் ஏற்பட விடுவதற்குப் பதிலாக, அதை ஆர்ஜிதம் செய்தால் நல்லது என்று அரசினர் உணர்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஆர்ஜிதம் செய்ய வேண்டிய ஆர்ஜிதம் செய்கிறோம். தண்ணீர் வற்றும்பொழுது, விவசாயிகள் விவசாயம் செய்து அதனால் பலன் அடைகிறார்கள். மாமூலாக பல வருஷங்களாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும் அப்புறப்படுத்தினால் நலமாக இருக்காது என்பது அரசாங்கத்தின் கருத்து.

விவசாயிகளுக்கு நிவாரணம்

* 89 கேள்வி—மு. ரா. கிருஷ்ணமூர்த்தி: கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் தஞ்சை மாவட்டத்திலும், தென் ஆற்காடு மாவட்டத்திலும் அறுவடை செய்யப்பட்ட சம்பா நஞ்சை நிலங்களில் உற்பத்திக் குறைவினால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருப்பது உண்மையா ?

(இ) ஆமெனில் அவர்களுக்கு எந்த வகையில் நிவாரணம் அளிக்க உத்தேசம் ?

THE HON. SRI P. KAKKAN : (a) Yes Sir.

(b) One hundred and eighty bags of paddy seeds were distributed to the ryots affected by floods at half cost in South Arcot district. A special remission of Rs. 5,762.15 was granted for the crops affected in the floods as a relief measure. In Thanjavur district 1,130 bags of samba seeds was distributed to ryots in flood affected areas at subsidised rate. A short term spot loan of Rs. 1,49,500 has been disbursed to them. A remission of Rs. 31,291-74 nP. was also granted for an extent of 6,118.82 acres.

திரு. எம் தண்டாயுதபாணி: தஞ்சை ஜில்லாவில் இருபோக சாகுபடி பாதிக்கப்பட்டது சம்பந்தமாக இந்தக் கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது என்று நினைக்கிறேன். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் கடந்த ஆண்டு சம்பா சாகுபடி எவ்வளவு பாதிக்கப்பட்டது, எதிர்பார்த்தது எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : தனியாகக் கேள்வி போடவேண்டும்.

திரு. ம. கமலநாதன் : நஞ்சை நிலங்களில் உற்பத்திக் குறைவினால் விவசாயிகளுக்கு என்ன நிவாரணம் அளிக்கப்பட்டது என்று கேட்கப்பட்டது. அமைச்சரவர்கள் பதில் சொல்லும்

[24th October 1964

பொழுது வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு கொடுக்கப்பட்டது என்று சொன்னர்கள். தஞ்சை மாவட்டத்தில் உற்பத்திக் குறைவினல் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு கொடுப்பது என்றல், மற்ற மாவட்டங்களிலும் அப்படிப்பட்ட ஏற்பாடுகளை அரசினர் செய்வதற்கு முன்வருவார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : மழை பெய்து வெள்ளம் வந்து அதனல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு கொடுக்கிறேம். மற்றவர் களுக்கு கொடுப்பதில்லை. அந்தந்த சமயத்தில் மக்கள் முறை யிட்டால் அதைப் பரிசிலனைசெய்து அரசாங்கம் முடிவெடுக்கும்.

UNSTARRED QUESTIONS

Advances for installation of pump sets.

16 Q.—Sri T. P. ALAGAMUTHU கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1963-64-ல் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு வடிமுனை போர் கிணறுகளில் (Filter point) பம்ப் செட் அமைக்க விவசாயி களுக்கு கடன் கொடுக்க எவ்வளவு பணம் ஒதுக்கப்பட்டது ?

(இ) ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் செலவழிக்கப் பட்டதா ?

A.—(*a*) Rs. 1,00,000 (Ruppees one lakh).

(*b*) No, Sir. A sum of Rs. 68,360 (rupees sixty-eight thousand three hundred and sixty) only was spent.

(அ) ரூ. 1,00,000.

(இ) இல்லை. ரூ. 68,360 மட்டுமே செலவழிக்கப்பட்டது.

Slum clearance in Mylapore.

17 Q.—Sri RAMA ARANGANNAL : கனம் உள்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

மயிலை 84-வது வட்டத்திலுள்ள சிலேட்டர்புரம், மீனம்பாள் புரம், ருதக்போர்டு ஆகிய அரிசன மக்களுடைய குடிசைவாழ் பகுதிகளைத் திருத்தியமைக்கும் திட்டம் அரசாங்கத்திடம் உள்ளதா ?

A.—*Meenambal and Ruthekford Slums.*—There is no scheme at present to clear these slums.

These will be considered for inclusion in the comprehensive scheme for clearing the slums on both sides of Buckingam Canal.